# தமிழ்நாடு உங்களை எண்ணிப் பெருமை கொள்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - உலக செஸ் சாம்பியனாக வெற்றி வாகை சூடிய குகேஷுக்கு பாராட்டு!

சென்னை, டிச. 13-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டின் குகேஷுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார். அதில் "தமிழ்நாடு உங்களை எண்ணி பெருமை கொள்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக செஸ் சாம்பியனாக வாகைசூடி மிக இளம் வயதில் இப்பட்டத்தை வென்றிருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த குகேஷ் அவர்களை பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:



பதினெட்டே வயதில் உலக செஸ் சாம்பியனாக வாகைசூடி மிக இளம் வயதில் இப்பட்டத்தை வென்றிருக்கும் குகேஷ் அவர்களுக்குப் பாராட்டுகள்!

தங்களது இந்தச் சிறப்புமிகு சாதனை செஸ் விளையாட் டில் இந்தியாவின் வளமான மரபின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. மேலும், மற்றுமொரு உலக சாம்பியனை உருவாக்கி, செஸ் தலைநகரம் என்ற சிறப்பிடத்தை உலக அளவில் சென்னை தக்கவைத்துக் கொள்ளவும் அது துணை புரிந்துள்ளது.

தமிழ்நாடு உங்களை எண்ணிப் பெருமைகொள்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

செஸ் சாம்பியன் டி.குகேஷ் வெற்றியால் நாட்டிற்குப் பெருமை!

# தமிழ்நாட்டையும் உலக அளவில் கொண்டு சேர்த்துள்ளது!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, டிச. 13-**

**உலக செஸ் சாம்பியனாக டி. குகேஷ் பெற்ற வெற்றியால் நாட்டிற்குப் பெருமை என்பதோடு, உலக அளவில் தமிழ்நாட்டையும் கொண்டு சேர்த்துள்ளது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.**

உலக செஸ் சாம்பியனாக வெற்றிபெற்ற தமிழ்நாட்டின்செஸ் விளையாட்டு வீரர் டி.குகேஷ் அவர்களை பாராட்டி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சமூகவலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:



சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் 2024 போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் கிராண்ட்மாஸ்டர் டி.குகேஷ்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் 'எலைட்'பிளேயர்ஸ் திட்ட வீரரான குகேஷ், சர்வதேச சதுரங்கப் போட்டிகளில் தொடர்ந்து வெற்றிகளை ஈட்டி வருவதில் பெருமிதம் கொள்கிறோம்.

அவரது வெற்றி நம் நாட்டிற்கு பெருமை சேர்ப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டையும் உலக அளவில் கொண்டு சேர்த்துள்ளது.

இளம் வயதிலேயே இந்த அசாதரண திறமை பலருக்கும் உத்வேகம் அளிக்கிறது. நம் சாம்பியன் தம்பி குகேஷ் இன்னும் பல சாதனைகளை படைத்து மென்மேலும் பிரகாசிக்க வாழ்த்துகள்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அவசர கால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு - பேட்டி!

முதல் பக்கத் தொடர்ச்சி

நேற்று இந்திய வானிலை ஆய்வு மையம் தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதி கனமழை பெய்யும் என்று சிவப்பு அலர்ட் விடுத்தது. இதன் காரணமாக தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கனமழை ஏற்பட்டு, தாமிரபரணி ஆற்றில் 50,000 கன அடி தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றின் கரையோரம் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல மாவட்ட நிருவாகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வெள்ள அபாயம் குறித்து 11.75 பேருக்கு குறுந்செய்தி!**

பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் வெள்ள அபாயம் குறித்து 11.75 இலட்சம் செல்பேசிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

அரியலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்து இருவரும், சிவகங்கை மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் மின்சாரம் தாக்கி இருவரும் இறந்துள்ளனர்.

மயிலாடுதுறை, செங்கல்பட்டு உள்ளிட்ட 10 மாவட்டங்களில் மொத்தம் 117 கால்நடைகள் இறந்துள்ளன. அரியலூர், செங்கல்பட்டு உள்ளிட்ட 20 மாவட்டங்களில் மொத்தம் 438 வீடுகள் சேதமடைந்துள்ளன. 50 நிவாரண முகாம்களில், 2034 நபர்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அரியலூர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கும், மதுரை, திண்டுக்கல், கடலூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, இராமநாதபுரம், சேலம், விருதுநகர், சிவகங்கை, தேனி, கரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று நேற்று ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர் அவர்கள், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்ட போது, கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண பணிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

**பாதிக்கப்பட்டவர்கள் தங்க முகாம்கள்!**

அதனைத் தொடர்ந்து, கனமழை காரணமாக மக்கள் வசிக்கும் தாழ்வான பகுதிகளில் சூழ்ந்துள்ள மழைநீரை உடனடியாக அகற்றிட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக முகாம்களை தயார் நிலையில் வைத்திருக்கவும் உத்தரவிட்டார். மேலும், முகாம்களில் மக்களுக்கு வழங்கிட உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதையொட்டி நிவாரண பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

இந்த ஆய்வின்போது, பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் வி. மோகனசந்திரம், கூடுதல் ஆணையர் (வருவாய் நிர்வாகம்) டாக்டர் எஸ். நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**முதல்வர் பேட்டி!**

இதையடுத்து செய்தியாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.12.2024) சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்தபின் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

**செய்தியாளர் –** தென் மாவட்டங்களில் கனமழை பெய்திருக்கிறது. அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பெரிய அளவிற்கு மழை பெய்திருக்கிறது. அதற்கு ஏற்கனவே இரண்டு நாட்களாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி அதை மேற்பார்வையிடுவதற்காக இங்கிருந்து மூத்த ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட்டு, நிவாரணப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிகப் பெரிய அளவிற்கு பாதிப்புக்கள் ஏற்பட்டதாக ஏதும் செய்தி கிடையாது. எது வந்தாலும் அதை சமாளித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

**செய்தியாளர் –** அமைச்சர்கள் கண்காணிப்புப் பணிகளில் இருக்கிறார்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** தென்காசி பகுதிக்கு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களை அனுப்பி வைத்திருக்கிறோம். திருநெல்வேலிக்கு நேற்று அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சென்று வந்திருக்கிறார். திருச்சி மாவட்டத்தில் மழை பெய்துள்ளதால் அங்கு வந்தவரை திருநெல்வேலியில் மறுபடியும் மழை பெய்துள்ளதால் அவரை அங்கு அனுப்பியிருக்கிறோம்.

**செய்தியாளர் –** பேரிடர் நிதியை ஒன்றிய அரசிடமிருந்து தொடர்ந்து நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நேற்று கூட நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் பேசியிருந்தார்கள். குறைவாகவே தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கு தருகிறார்கள். அது பற்றி...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** ஊடகத்தில் இருக்கக்கூடியவர்கள் நீங்கள் எல்லாம் அதனை தொடர்ந்து எழுதினீர்கள் என்றால், அதுவே பெரிய அழுத்தமாக இருக்கும்.

**செய்தியாளர் –** ஏற்கனவே வழங்கிய நிதி போதுமானதாக இருக்கிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** அது எப்படி போதும். போதுமானதாக இல்லை.

**செய்தியாளர் –** நீர்த் தேக்கம், ஏரிகளிலிருந்து உபரி நீர் திறந்து விடப்படுகிறதே வெள்ள அபாய எச்சரிக்கை குறித்து...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** உபரிநீர் திறந்து விடப்படுவதற்கு முன்னர், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெள்ள அபாய எச்சரிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. அனைத்து பொதுமக்களும் அங்கிருந்து அப்புறப் படுத்தப்பட்டு வேறு இடத்திற்கு, பாதுகாப்பாக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**செய்தியாளர் –** நிவாரண உதவிகள் வழங்கும் கணக்கெடுப்பு பணிகள் நிறை வடைந்துள்ளதா...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறதே. கிட்டத்தட்ட வழங்கி முடிந்துவிட்டது.

**செய்தியாளர் –** ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருக்கிறது. இது என்ன மாதிரியான எதிரொலியாக பார்க்கப்படுகிறது...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்-** நேற்றே தெளிவாக அறிக்கை அளிக்கப்பட்டுவிட்டது. எங்களால் முடிந்தவரைக்கும் ஒன்று சேர்ந்து கடுமையாக எதிர்ப்போம்.

**செய்தியாளர் –** கூட்டணிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து மிகப் பெரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் திட்டம் ஏதும் இருக்கிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** பார்ப்போம், யோசனை செய்வோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

நாட்டில் உள்ள

# நூலகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

*புதுடெல்லி, டிச. 12 -*

நாட்டில் உள்ள நூலகங்களின் தரத்தை உயர்த்தவும் எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்றத் தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நாட்டில் உள்ள நூலகங்களின் தரத்தை உயர்த்தவும், எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

நூலகங்களுக்கான தேசிய இயக்கத்தின் கீழ், தமிழ்நாடு உட்பட நாட்டில், மாநில வாரியாக, மத்திய நூலகங்கள் மற்றும் மாவட்ட நூலகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

நாட்டில் நூலகங்களை அமைப்பதற்காக இது வரை வழங்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி உதவி விவரங்கள் யாவை?

தமிழ் நாட்டில் சரஸ்வதி மஹால் நூலகம் மற்றும் உலகப் புகழ்பெற்ற சென்னை கன்னிமாரா நூலகக் கட்டிடத்தின் வளர்ச்சி, மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளதா, இல்லை என்றால் அதற்கான காரணங்கள் என்ன?

பதில் : ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின்படி, நூலகம் ஒரு மாநில அரசின் அதிகார வரம்பிற்கு கீழ் வருகிறது. மேலும் பொது நூலகங்கள் அந்தந்த மாநில/யூனியன் பிரதேச அதிகாரிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

நாட்டில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, அந்தந்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் வரம்புக்கு உட்பட்டது.

நூலகங்களை அமைப்பது அந்தந்த மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் கீழ் வருகிறது. இருப்பினும், கலாச்சார அமைச்சகம் அதன் தேசிய நூலகங்கள் (NML) திட்டத்தின் மூலம், NML மாதிரி நூலகக் கூறுகளை அமைப்பதன் கீழ், ஒவ்வொரு மாநிலம் / யூனியன் பிரதேசத்தில் உள்ள 1 மாநில மத்திய நூலகத்திற்கும் 1 மாவட்ட நூலகத்திற்கும் நிதி உதவி வழங்குகிறது. சம்பந்தப்பட்ட மாநில அதிகாரிகள் மற்றும் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள நூலகங்கள் NML திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உட்பட மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி விவரங் களைப் பார்க்கையில் தமிழ் நாடு மாநிலத்தில் திருச்சி ராப் பள்ளி மாவட்ட நூலகம் மற்றும் வேலூர் மாவட்ட நூலகத்திற்கு முறையே ரூ.68.16 லட்சம் மற்றும் ரூ.79.27 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

அதே நேரத்தில் சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் சென்னை கன்னிமாரா நூலகக் கட்டிடத்தின் வளர்ச்சி, மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்ய முன்மொழிவு எதுவும் ஒன்றிய அரசிடம் இருந்து பெறப்படவில்லை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

சென்னை உயர்நீதி மன்ற

# தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் துணைவியாரின் தாயார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.14-

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் அவர்களது துணைவியாரின் தாயார் திருமதி ருக்மினி அவர்களின் மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம் அவர்களது துணைவியாரின் தாயார் திருமதி ருக்மினி அவர்கள்மறைவுற்றசெய்தியறிந்தமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கே.ஆர். ஸ்ரீராம் அவர்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டார்.


வேலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள தோட்டப்பாளையம் -

# சி.எம்.சி.ரோடு - காந்தி ரோடு பகுதிகளில் மின் புதைவடங்கள் பதிக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் – கழக உறுப்பினர் ப.கார்த்திகேயன் கேள்வி!

*சென்னை,டிச.14-*

சட்டப்பேரவையில் கேள்வி- நேரம் பகுதியில் வேலூர் தொகுதி சட்டமன்ற கழக உறுப்பினர் ப. கார்த்திகேயன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அளித்த பதிலும் வருமாறு:-



**ப. கார்த்திகேயன்:** என்னுடைய தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய வேலூர் சட்டமன்றத் தொகுதியில் சித்ரா பௌர்ணமியின்போது 10 புஷ்ப பல்லக்குகள் வருகின்றன. எனவே, தோட்டப்பாளையம் பகுதி, சி.எம்.சி. ரோடு, காந்தி ரோடு, மண்டித் தெரு, வாரியார் சாலை, அண்ணா சாலை ஆகிய பகுதிகளில் *underground cable* பதித்து கொடுத்தால் நன்றாக இருக்கும். நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய வேலூர் சட்டமன்றத் தொகுதிக்கு நிறைய நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். இதையும் செய்து கொடுத்தால் சித்ரா பௌர்ணமியின்போது *current off* ஆகாமல் இருக்கும். அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** மதுரை மற்றும் கோவை ஆகிய இரண்டு மாநகராட்சிப் பகுதிகளில் புதைவடங்கள் அமைக்கக் கூடிய பணியிடங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி, ஏற்கெனவே அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யக்கூடிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள் வரும் ஆண்டுகளில் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அதுகுறித்து முன்னுரிமை வழங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பதிலளித்தார்.



நெல்லை மாநகர தி.மு.க.ஏற்பாட்டில் நெல்லை வண்ணாரப்பேட்டை அஃப்னா பார்க்கில் நாம் தமிழர் கட்சியினர் சுமார் 250 பேர்கள் அக்கட்சியிலிருந்து விலகி கழகத்தில் இணையும் நிகழ்வு கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. அப்போது நாம் தமிழர் கட்சி மாவட்ட இளைஞரணி செயலாளர் பர்வீன் தலைமையில் நாங்குநேரி தொகுதி செயலாளர் அந்தோணி விஜய், ஒன்றிய செயலாளர் அந்தோணி ராஜ், நெல்லை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் தேவதாஸ் உள்பட 250 பேர்கள் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன்,துணை மேயர் ராஜ், பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன் ஆகியோர் உள்ளனர்.